Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.107/2025

Dated 25-02-2026
Deposition of witness for : PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜாங்கம் | வயது | : | 62 |
| தந்தை பெயர் | : | கருத்தகண்ணன் | தாலுக்கா | : | மதுரை |
| கிராமம் | : | பசுமலை | தொழில் | : | செக்யூரிட்டி |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1,2,3 absent 355 BNSS Petitions filed and allowed.**

L.D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்தோடு வசித்து வருகிறேன்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மற்றொரு கையெழுத்து மேனேஜர் மணிகண்டனின் கையெழுத்து ஆகும்.

3)மேற்கண்ட கையெழுத்தை 24.6.2018 அன்று செக்யூரிட்டி வேலை பார்த்த கலியபெருமாளை அடித்து கொன்று விட்டார்கள். இது சம்பந்தமாக போலிசார் வந்து பார்த்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். பிறகு சம்பவ இடத்தில் இருந்து ரத்தக்கரை படிந்த சிமெண்ட் காரை, ரத்தம் படியாத சிமெண்ட் காரை சிறிதளவு, ரத்தக்கரை படிந்த ஆளோபிளாக் கல் ஒன்று, ரத்தக்கரை படிந்த துண்டு ஒன்று, ஆகியவற்றை மகஜரில் போலிசார் கைப்பற்றினார்கள். அதற்காக அந்த மகஜர்களில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் இதுதான். அது **அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் ரத்தக்கரை படிந்த சிமெண்ட் காரை இதுதான். அது **சா.பொ.1,** ஆகும். ரத்தம் படியாத சிமெண்ட் காரை இதுதான். அது **சா.பொ.2,** ஆகும். ரத்தக்கரை படிந்த ஆளோபிளாக் கல் இதுதான். அது **சா.பொ.3** ஆகும். ரத்தக்கரை படிந்த துண்டு ஒன்று இதுதான். அது **சா.பொ.4** ஆகும். அதற்கான கைப்பற்றுை மகஜர் இதுதான். அது **அ.சா.ஆ.2** ஆகும்.

4) இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) இந்த வழக்கு சம்பந்தமாக நான் காவல்நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான்.

2) கையெழுத்தை எழுதின பேப்பரில்தான் போட்டேன். இரண்டாவதாக போட்ட கையெழுத்தை 7.30 மணிக்கு போட்டேன். அதில் என்ன விபரம் எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. ஆனால் எழுதி இருந்தார்கள். அதை நான் படிக்கவில்லை.

3) சான்று பொருட்களை காம்பவுண்டுக்கு வெளியே எடுக்கவில்லை. காம்பவுண்டுக்கு உள்ளே எடுத்தார்கள். காம்பவுண்டுக்குள் நிறைய கல் கிடையாது. அங்கே அங்கே ஒன்று இரண்டு கற்கல் கிடந்தது. கற்களை ஒரே இடத்தில் இருந்துதான் எடுத்தார்கள்.

4) நான் முன்விசாரணையில் சொன்னதுபோல் என் முன்னிலையில் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் கையெழுத்துக்களை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்